# அண்ணாமலை - அன்புமணியைக் கண்டால் உடனே குஜராத்துக்கு அனுப்புங்கள்!



**In dry Gujarat, alcohol flows when cops escort prisoners**

Policeman Found Drunk In One Case, Undertrial In Another

குஜராத் மாநிலம் பி.ஜே.பி.யின் ஆட்சியில் இருக்கும் மாநிலம். நமது பிரதமர் மோடியும் உள்துறை அமைச்சர் அமித் ஷாவும், பல ஆண்டு காலம் ஆண்ட மாநிலம். மோடியும், அமித்ஷாவும் இன்று இடம் மாறியிருந்தாலும் அவர்களது கண்காணிப்பில் இருக்கும் மாநிலம்! மதுவிலக்கு அமலில் இருக்கும் மாநிலம். சிறப்பான நிர்வாகம் நடைபெறும் மாநிலம் என பா.ஜ.க.வினர் “தம்பட்டம்” அடித்துக் கொள்ளும் மாநிலம்!

அந்த மாநிலத்தில் காவல்துறை செயல்படும் விதத்தைக் குறித்து ஒரு செய்தியை “டைம்ஸ் ஆப் இந்தியா” நாளேடு வெளியிட்டுள்ளது. திரைப்படங்களில் வரும் காட்சிகளை விஞ்சிடும் அந்தக் காட்சிகள் குறித்த தெளிவான விபரங்களைப் படியுங்கள்.

குஜராத் மாநிலம் அம்ரேலி மாவட்டத்தில், பிரபல கள்ளச் சாராய வியாபாரி திரேஜ் கரியா. சிறையில் இருக்கும் இந்தப்பேர் வழியை காந்தி நகரில் உள்ள ஒரு நீதிமன்றத்துக்கு விசாரணைக்காக இரண்டு போலீசார் அழைத்துச் சென்றுள்ளனர். நீதிமன்றத்திலிருந்து சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட வேண்டிய இந்த நபரை, அந்த இரண்டு காவலர்களும் குஜராத்தின் ஜூனகாத் (Junagadh) பகுதியிலுள்ள அவருடைய (கள்ளச்சாராய வியாபாரி) வீட்டில் விட்டுள்ளனர்.

அந்த கள்ளச்சாராய வியாபாரியை அவருடைய வீட்டில் விட்டு விட்டு அந்த இரண்டு காவலர்களும் மது மற்றும் உணவு அருந்திட ஒரு ஹோட்டலுக்குச் சென்றுள்ளனர். மது போதையில் ஒரு காவலர் அவருக்கு உணவு பரிமாறிய ஊழியரிடம் சண்டையிட, அந்த ஹோட்டல் முதலாளி போலீசில் புகார் கொடுத்துள்ளார்.

இது ஒரு கூத்து என்றால் இன்னொரு கூத்து ராஜ்காட்டில் நடந்துள்ளது. அவேஷ் அவுடியா எனும் விசாரணைக் கைதியை ராஜ்காட் சிறையிலிருந்து விசாரணைக்காக போலீசார் அழைத்துச் சென்றுவிட்டு பின்னர் சிறைச்சாலையில் திரும்ப விட்டு விட்டுள்ளனர். இது நடந்தது மாலை 5.45 மணி அளவில். மதுபோதையில் இருந்த கைதி அவேஷ் அவுடியாவால் சரியாக நடக்க முடியாது தள்ளாடியதைக் கண்ட சிறை ஊழியர் அவரை மருத்துவ சோதனைக்கு அனுப்பினார். விசாரணைக்கு காவலரால் அழைத்துச் செல்லப்பட்டு திரும்பிய அந்த நபர் மது போதையில் இருந்தது அங்கு ஊர்ஜிதமானது.



Two Amreli constables who had escorted bootlegger Dhiraj Karia to a Gandhinagar court dropped him off at his house in Junagadh instead of taking him to jail. Then they proceeded to a hotel to eat and drink

இவைகள் இரண்டும் ஏடுகளில் “In Dry Gujarat, alcohol flows” மதுவிலக்கு அமலில் உள்ள குஜராத்தில் மது (வெள்ளமாய்) பாய்கிறது என்ற தலைப்பில் செய்திகள் வெளிவந்துள்ளது.

**இங்கே தமிழ்நாட்டில் இருந்து கொண்டு சம்மந்தா சம்பந்தமின்றி வெற்றுக் கூச்சலிட்டுக் கொண்டிருக்கும் அண்ணாமலை அவரது கூட்டணித் தோழர் அன்புமணி வகையறாக்களை கண்டால் - உடனடியாக குஜராத்துக்கு அனுப்பி வையுங்கள்.**

## செய்தி சேகரிக்க தடை!

# பத்திரிகையாளர்களை கண்டு அஞ்சும் மோடி அரசு!

## தடைகளை நீக்கக்கோரி நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டம்!

*புதுடெல்லி, ஜூலை 31-*

கொரோனா காலகட்டமான 2020இல், நோய் தொற்று அபாய வழிகாட்டு நெறிமுறை என்ற பெயரில் நாடாளுமன்றத்தில் பத்திரிகையாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டது. கொரோனா தொற்று காலம் முடிந்து 4 ஆண்டுகள் நிறைவடைந்த பொழுதிலும், நாடாளுமன்றத்தில் பத்திரிகையாளர்களுக்கு விதிக்கப்பட்ட தடையை முழுமையாக தளர்த்தாமல் மோடி அரசு அராஜகத்தில் ஈடுபட்டு வருகிறது. ஒரு சில கட்டுப்பாடுகளுடன் அதாவது பா.ஜ.க.விற்கு நெருக்கமான “கோடி மீடியா” ஊடகங்களின் பத்திரிகையாளர்களை மட்டுமே நாடாளுமன்றத்தில் செய்தி சேகரிக்க அனுமதி வழங்கி வருகிறது மோடி அரசு.

கூட்டணிக் கட்சிகளின் தயவால் மோடி மூன்றாவது முறையாக பிரதமர் ஆகியுள்ள நிலையில், தமிழ்நாடு காங்கிரஸ் எம்.பி., மாணிக்கம் தாகூர் ஜூன் 27 அன்று மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு, “நாடாளுமன்றத்தில் செய்தி சேகரிக்கும் பத்திரிகையாளர்களுக்கு கொரோனா காலத்தில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை நீக்கி, மீண்டும் பத்திரிகையாளர்களை நாடாளுமன்றத்திற்குள் அனுமதிக்க வேண்டும்” எனக் கோரிக்கை விடுத்து கடிதம் எழுதினார். இந்த கடிதத்திற்கு மோடி அரசு இதுவரை பதில் அளிக்கவில்லை.

இந்நிலையில், நாடாளுமன்ற கட்டிடத்தில் “மகர் துவார்” நுழைவு வாயிலில், நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பேட்டி எடுப்பது நீண்ட காலமாக நடந்து வருவது தான். ஆனால், திடீரென மோடி அரசு திங்களன்று காலை “மகர் துவார்” நுழைவு வாயிலில் பத்திரிகையாளர்கள் பேட்டி எடுக்கக் கூடாது என்றும், இது தடை செய்யப்பட்ட பகுதி என்று அறிவிப்பு வெளியிட்டு, பத்திரிகையாளர்களை அப்பகுதியில் இருந்து வெளியேற்றியது. இந்த அறிவிப்புக்கு எதிராகவும், நாடாளுமன்ற வளாகத்தில் முன்பிருந்த பல்வேறு அனுமதிகளுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதை கண்டித்தும், பிரஸ் கிளப் ஆப் இந்தியா சார்பில் நாடாளுமன்ற வளாகத்தில் பல்வேறு செய்தி நிறுவனங்களின் பத்திரிகையாளர்களும் போராட்டம் நடத்தினர். பத்திரிகையாளர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை உடனடியாக நீக்கக் கோரிக்கை பதாகைகளுடன், கோஷங்களை எழுப்பி காத்திருப்பு போராட்டம் நடத்தினர்.

### மூடி மறைக்கப்பட்ட செய்தி

நாடாளுமன்றத்தில் பத்திரிகையாளர்கள் போராட்டம் நடத்திய சம்பவம் நாட்டில் மூடி மறைக்கப்பட்டுள்ளது. பத்திரிகையாளர்கள் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய “பிரஸ் கிளப் ஆப் இந்தியா” தனது டுவிட்டர் எக்ஸ் பக்கத்தில் வீடியோ உடன் செய்தி தொகுப்பை வெளியிட்டது. அதன்பிறகு “கோடி மீடியா” பிரிவில் இல்லாத ஊடகங்கள் மட்டுமே நாடாளுமன்ற பத்திரிகையாளர்கள் போராட்டத்தை செய்தியாக வெளியிட்டன. பா.ஜ.க. ஆதரவு “கோடி மீடியா” ஊடகங்கள் வழக்கம் போல அம்பானி தனது மனைவியுடன் பாரீஸ் ஒலிம்பிக்குக்கு சென்றதையும், பாரீஸ் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற மனு பாக்கருக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்ததையும் தலைப்புச் செய்தியாக இன்னமும் ஒளிபரப்பி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# திருவள்ளூரில் மாற்றுத் திறனாளிகளுக்கு நல உதவிகள்!

*திருவள்ளூர், ஜூலை 31-*

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி மற்றும் பொன்னேரி தொகுதிகளில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு சென்னை பெட்ரோல் கெமிக்கல் லிமிடெட் மற்றும் அலிமிகோ ஆகிய இரு நிறுவனங்களின் மூலமாக பெருநிறுவன பொறுப்பு நிதி (சி.எஸ்.ஆர்) ரூபாய் 36 லட்சம் திட்ட மதிப்பில் உபகரணங்களை 136 பயனாளிகளுக்கு மாவட்ட செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. வழங்கினார். நிகழ்ச்சியில் ஜெ.மூர்த்தி, எஸ்.ரமேஷ், மு.மணிபாலன், பா.செ.குணசேகர், ஏ.வி.ராமமூர்த்தி, டி.கே. சந்திரசேகர், ஆ.சத்தியவேலு, ஜான்(எ)பொன்னுசாமி, மு.பாஸ்கர், எஸ்.ராமஜெயம், கே. ஆறுமுகம், வி.பி.ரவிகுமார், கே.ஜி.நமசிவாயம், டாக்டர்.வில்சன்நிலவழகன், டாக்டர்.பாலமுருகன், தேசராணிதேசப்பன், ஆர்.காண்டீபன், ஆர். ரஞ்சித், கே.இ.திருமலை, ஜெயசந்திரன் முனிவேல், முரளி, நாகராஜ், கோபி, அறிவழகன், யுவராஜ், தினேஷ், இளம்புயல் நவீன், ராஜா, ரமேஷ், சாந்த குமார், சிவராஜ், வெற்றிசெல்வி, ஜெய சித்ரா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் – மீனவ சங்கப் பிரதிநிதிகள் சந்திப்பு! இலங்கைச் சிறையில் வாடும்

# மீனவர்களின் குடும்பங்களுக்கான தின உதவித் தொகை - உயர்த்தி முதல்வர் உத்தரவு!

## தமிழ்நாடு மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படையால் பிரச்சினை! நிரந்தரத் தீர்வு காண தமிழ்நாடு எம்.பி.க்களுக்கு – முதல்வர் அறிவுரை!

**சென்னை, ஜூலை 31-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் - மீனவ சங்கப் பிரதிநிதிகள் சந்தித்து உரையாடினர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இலங்கைச் சிறையில் வாடும் மீனவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் தின உதவி தொகை 250 ரூபாய் என்பதை 350 ரூபாயாக உயர்த்தி வழங்க உத்தரவிட்டுள்ளார்.**

**கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட விசைப்படகு உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.5 இலட்சம் என்பது ரூ.6 இலட்சம் ஆகவும் நாட்டுப்படகுகள் உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் ரூ.1.5 இலட்சம் என்பது ரூ.2 இலட்சம் ஆகவும் உயர்த்தியும் முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.**

**இராமேஸ்வரம் பாம்பன் தூக்குப் பாலம் அருகில் மீனவர்களின் கோரிக்கை ஏற்று தூர்வார நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்த முதல்வர் அவர்கள், இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள 87 மீனவர்களையும் 175 படகுகளையும் மீட்டுத்தரவும் - சிறையில் வாடும் மீனவர்களை மீனவச் சங்கப் பிரதிநிதிகள் சந்திக்கவும் அனுமதி வழங்கிட இந்தியப் பிரதமர் அவர்களுக்கும் வெளியுறவுத் துறை அமைச்சருக்கும் முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.**

**தமிழ்நாடு மீனவர்களுக்கு இலங்கை கடற்படையால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து வலியுறுத்திட தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுரை வழங்கினார்.**

**கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட விசைப்படகு உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.5 இலட்சம் என்பது ரூ.6 இலட்சம் ஆகவும் நாட்டுப்படகுகள் உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் ரூ.1.5 இலட்சம் என்பது ரூ.2 இலட்சம் ஆகவும் உயர்த்தி முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.**

இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட மீனவ சங்கப் பிரதிநிதிகள் - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியது குறித்த விபரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 26-07-2024 அன்று தலைமைச் செயலகத்தில், இராமநாதபுரம், புதுக்கோட்டை தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட மீனவ சங்கப் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசினர். இச்சந்திப்பின் போது, தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படும் நிகழ்வு குறித்தும், அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் குறித்தும், இதனால் அவர்களுக்கு ஏற்படும் இன்னல்களை எடுத்துரைத்தும், தங்களது கோரிக்கைகளை பரிசீலனை செய்து நிறைவேற்றி தருமாறு கேட்டுக் கொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது, மீனவ சங்கப் பிரநிதிகள் பாம்பன் தூக்குப்பாலம் அருகே கால்வாய் தூர் வாரவேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை விடுத்தனர்.

மேலும், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 87 மீனவர் களையும், கைப்பற்றப்பட்டுள்ள 175 படகுகளையும் மீட்டுத்தர தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை மீனவசங்கப் பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டனர்.

மீனவர் சங்கப் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை பரிவுடன் பரிசீலித்து, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு அங்கு சிறையில் இருக்கும் மீனவர்களின் குடும்பங்களுக்கு தின உதவித் தொகையாக தற்போது நாளொன்றுக்கு250 ரூபாய் வழங்கப்பட்டு வரும் நிலையில், அவர்களது குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை பாதுகாத்திட தின உதவித் தொகையினை நாளொன்றுக்கு 350 ரூபாயாக உயர்த்தி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

ஏற்கனவே இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளின் உரிமையாளர்கள் நலன் கருதி, முதலமைச்சர் அவர்கள் கடந்த 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இரு தவணைகளில் 151 படகுகளின் உரிமையாளர்களுக்கு நிவாரண உதவி வழங்க ஆணை யிட்டார்கள். அதனடிப்படையில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து விசைப்படகுகளுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் மற்றும் நாட்டுப் படகுகளுக்கு தலா 1.5 இலட்சம் ரூபாய் என மொத்தம் 6.74 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டது.

இந்த நிலையில் தற்போது, இலங்கை கடற்படையினரால் 2018 முதல் 2023 ஆம் ஆண்டு வரை கைப்பற்றப்பட்டு அங்கு நெடுங்கால மாக உள்ள 127 மீட்க இயலாத படகுகளுக்கு கடந்த ஆண்டுகளில் வழங்கிய நிவாரண தொகையினை விசைப்படகுகளுக்கு ரூ.5 லட்சத்திலிருந்து ரூ.6 லட்சமாக உயர்த்தியும், நாட்டுப்படகுகளுக்கு வழங்கப்பட்டு வந்த 1.5 ரூபாயை 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார். இதனால் மீனவர்கள் ரூ.6.82 கோடி அளவிற்கு பயனடைவார்கள்.

மேலும் பாம்பன் தூக்குப்பாலம் அருகே தூர்வாரும் கோரிக்கையினை ஏற்று தேவையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அதன் அடிப்படையில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 87 மீனவர்களையும், கைப்பற்றப்பட்டுள்ள 175 படகுகளை நேரடியான நிலையான தூதரக நடவடிக்கை மூலமாக மீட்டுத்தரவும், கைப்பற்றப் பட்டுள்ள படகுகளை ஆய்வு செய்ய குழுவினரை அனுமதிக்கவும், இலங்கை சிறையில் வாடும் தமிழக மீனவர்களை, மீனவச் சங்கப் பிரதிநிதிகள் சந்திக்கவும், கூட்டுப் பணிக் குழு கூட்டத்தினை நடத்திடவும் முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமர் அவர்களையும், ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களையும் தொடர்ந்து வலியுறுத்திவருகிறார்.

எனவே, இந்த சூழ்நிலையின் தீவிரத் தன்மையைக் கருத்தில் கொண்டு, நாடாளுமன்றத்தில் இப்பொருள் குறித்து பேசிடவும், தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு, விரைவில் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்தும் இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண வலியுறுத்துமாறு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

மீனவர்களுடனான சந்திப்பின் போது, எஸ்.ரகுபதி. சட்டத்துறை அமைச்சர், அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாஷா முத்துராமலிங்கம், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா. கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர்நலத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் ந.கௌதமன். மீன்வளத்துறை இயக்குநர் திருமதி ஆர்.கஜலட்சுமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.